வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா பவுல்ரிறி டெவலப்மென்ட் (''தனியார்'') கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள பிரிவுகளின் பிரகாரம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனம் ஒன்றின் உதவியைப் நான் பெற்றிருந்தேன்

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. கம்பனியினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் கம்பனியினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) மதிப்பீட்டு அறிக்கையில்லாததால் ரூபா 4,445,013 தொகையான இருப்பு மீதியின் மதிப்பீட்டு உண்மைத்தன்மையை உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

(ஆ) விரிவான பட்டியல்கள், வயதுப் பகுப்பாய்வு, கடன்பட்டோர்கள் உறுதிப்படுத்தல், பற்றுச்சீட்டுக்களை மற்றும் ஏனைய மூல ஆவணங்கள் இன்மையால் ரூபா 8,969,395 தொகையான ஏனைய வருமதி மீதியை சரிபார்க்க முடிந்திருக்கவில்லை.

(இ) உரிய உத்தியோகத்தர்களின் நியமனக்கடிதங்கள் மற்றும் தனிப்பட்ட கோவைகள் போன்ற தகவல் இன்மையால் ரூபா 949,399 தொகையான செலுத்த வேண்டிய மானியத்தின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

(ஈ) விரிவான பட்டியல்கள், வயதுப் பகுப்பாய்வு, கடன்கொடுத்தோர்கள் உறுதிப்படுத்தல்கள் மற்றும் மூல ஆவணங்கள் இன்மையால் ரூபா 6,810,914 தொகையான வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளைா சரிபார்க்க முடிந்திருக்கவில்லை.

(உ) கம்பனியின் நிலையான சொத்துக்களானது குறியீடு செய்யப்பட்டிருக்காததுடன் (Coded) நிலையான சொத்துக்கள் பதிவேடு பௌதீக சொத்துக்களை சரிபார்த்தலிற்காக கிடைக்கப் பெற்றிருக்கவில்லையென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஊ) கம்பனியின் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக் கொடுப்பனவுகள் தொடர்பில் வரிப்பொறுப்பொன்று காணப்படுகின்றதென உள்நாட்டு இறைவரித் திணைக்களம் உறுதிப்படுத்தியிருந்தது. எனினும், இது தொடர்பிலான ஏற்பாடொன்று கம்பனியால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) எனது அபிப்பிராயத்தில் :

- இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினைத் தவிர்த்து,கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களும் விளக்கங்களும் நான் பெற்றிருக்கின்றேன் என்றும்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனி மற்றும் குழுவினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 9,635,596 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்திற்கு எதிராக ரூபா 13,944,614 ஆன வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தை விளைவித்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 23,580,210 பற்றாக்குறையொன்றைச் சுட்டிக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 54,033,000 இனால் அகற்றல் இலாபம் குறைவடைந்தமை நிதிசார் விளைவுகளில் பற்றாக்குறைக்கு பிரதான காரணமாகக் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயலநடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கையை கம்பனி தயாரித்திருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

பௌதீக இருப்பு மீதி ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலுள்ளவாறான பேரேட்டு கணக்குடன் இணங்கியிருக்கவில்லை.

### 4.2 குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்

ஒரு தடவையில் 57,200 முட்டைகளை அடுக்கக்கூடிய செற்றர் (Setter) இயந்திரமொன்றும் தீனி அரைக்கும் இயந்திரமொன்றும் (Feed Grinding Machine) பயன்படுத்தபடாமல் விளைவற்றிருந்தமை பௌதீக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

### 4.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30/2006 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம், உத்தியோகத்தர்கள் மீள ஒழுங்கமைக்கப்பட்டிருக்காததுடன் கம்பனி ஆட்சேர்ப்பு திட்டத்தை தயாரித்தருக்கவில்லை.

(ஆ) 2016 யூன் 16 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிகையின் பிரகாரம், கம்பனியால் செலுத்தப்பட்ட சம்பளங்களிற்கிடையில் முரண்பாடுகள் காணப்பட்டது.

**5.** **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பெறுகை மற்றும் ஒப்பந்த செய்முறை**

பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2006 இன் பெறுகை வழிகாட்டி 4.2.1(அ) இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**6.** **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு**

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **கட்டுப்பாட்டு பரப்புக்கள்** | **அவதானிப்பு** |
| --- | --- |
| (அ) பெறுகை முகாமைத்துவம் | பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்காமையிருக்காமை |
| (ஆ) கணக்கீடு | கணக்கீட்டு முறைமையின் உள்ளகக் கட்டுப்பாட்டிலுள்ள தவறுகள் |
| (இ) இருப்பு முகாமைத்துவம் | வெளிச் செல்லல் குறிப்புக்கள் பொருட்கள் வழங்கல் குறிப்புக்களுடன் இணங்கியிருக்கவில்லை. |